# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN

### பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை எண். 22 - 2025*

**கல்வி**

- தொடக்கநிலை, மழலையர் ,சிறுவர் வகுப்புகள் அடுத்தவாரம் அனைத்துலகத்தேர்வு காரணமாக நடைபெறமாட்டாது.
- தேர்வுத்தாள் மீட்டல், மாணவர்தேர்ச்சி அறிக்கை வழங்கல் , உளக்களிப்பு போன்றன இவ்வாரம் வகுப்புகளில் நடைபெறும்.
- இவ்வருடமும் வழமைபோல் வெள்ளிக்கிழமை 18.45 மணிக்கும், சனிக்கிழமை 10.45 மணியிலிருந்து நெருப்பில் வாட்டி உண்ணத்தக்கவாறு பாடசாலையால் (பொல்சர்,lompe போன்றன) ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்ந்து விளையாட்டுப் போட்டிக்குப் பதிந்த மாணவர்களுக்கான குழையெடுத்தல், கிளித்தட்டு மற்றைய விளையாட்டுக்கான பயிற்சிகள் றொம்மன் மைதானத்தில் நடைபெறும்.
- அனைத்துலகத் தமிழ் ஆண்டிறுதி எழுத்துத்தேர்வு 07.06.25 சனிக்கிழமை நடைபெறும்.

**நிதி**

கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம். ஏற்கனவே செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும். விவரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் முழுமையாகச் செலுத்தியவர்கள் மட்டுமே (3 மாதங்களுக்கு முன்னர் செலுத்தியிருத்தல் வேண்டும்.) அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் றொம்மன் வளாகத்தில் கற்றல் செயற்பாடுகளுக்குத் தகுந்த காரணம் அல்லது தகவலின்றி தொடர்ந்து பங்குபற்றாத மாணவர்களின் பெற்றோருக்குத் தனிப்பட்ட தகவல் அனுப்பிவைக்கவுள்ளோம்.

## தேர்வுக்குழு 2025

இவ்வாண்டு இலையுதிர் காலப்பகுதியில் ஆண்டுக்கூட்டத்தினை நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதற்கு முன் அனைவரும் தங்களின் உறுப்பினர் உரிமையை உறுதிப்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் விரைவாகத் தங்கள் விவரங்களைத் தெரிவுக்குழுவினருக்கு எழுத்துமூலமாக வழங்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். நிர்வாகத் தெரிவுக்குழு மின்னஞ்சல்: valgkomite.rommen@annai.no

**நிர்வாகத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய தகமைகள்!**

*அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்பு விதிகளுக்கும், நடைமுறைவிதிகளுக்கும் நோர்வே நாட்டு சட்டவிதிகளுக்கும் கட்டுப்பட்டு, கல்வி, கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் போதியளவு நேரம்விடக்கூடியவர்களாக இருத்தல் அவசியம். முக்கியமாக உறுப்பினர் உரிமையை முழுமையாகப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.*

# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN

**விளையாட்டு 2025**

விளையாட்டுப் போட்டிக்கு பதிவதற்கான விண்ணப்பப்படிவமும், விளையாட்டுப்போட்டித் தகவல்களும் வகுப்புக் குழுக்களில் பகிரப்பட்டுள்ளன.

விளையாட்டுப் பதிவுகளைச் செய்து, அதற்கான கட்டணத்தையும் செலுத்தவும். வாரம் 23 பதிவு செய்வதற்கான இறுதிநாளாகும். பதிய முடியாதவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நாள்கள் விவரம்:**

1. சனி 14.06.2025 - அரையிறுதி, கள இறுதிப் போட்டிகள்.
   ஞாயிறு 15.06.2025 - 34ஆவது விளையாட்டுப் போட்டிகள்.

- *மாணவர்கள் இவ் விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு முன் Tamilsk Barn og Ungdom Idrettsklubb (TBUK) இல் உறுப்பினராகப் பதிவுசெய்தல் வேண்டும். இவ்விடயம் சார்ந்த ஒரு படிவம் மற்றும் PDF அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.*
- *விளையாட்டுப் போட்டிக்கான குழுவில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளவும்.*
- *விளையாட்டுப்போட்டிக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.*
- *இவ்வருட விளையாட்டுப்போட்டி விளையாட்டுவிழாவாக நடைபெறும்.*

இக்கல்வியாண்டின் இறுதிநாள் - 15.06.2025

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***
***தொலைபேசி எண். 004740076104.*** **நன்றி!**

நிர்வாகம் - றொம்மன் வளாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.